1973 ஆகஸ்ட் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பாராளுமன்ற அவைகள் இரண்டிலும் நிறைவேற்றப்பட்டு 1973-ம் ஆண்டு அரசியல் அமைப்பு (31-வது திருத்த) சட்ட முன்வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ளவையும், இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் நோக்கத்தின் கீழ் வருபவையுமான திருத்தங்களை இப்பேரவை இசைவுடன் உறுதிப்படுத்துகிறது".

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(8) அமைச்சரின் அறிக்கை.

'லெவி' கொள்முதல் தற்காலிகமாக சில மாவட்டங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து உணவு அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 82-வது விதியின் கீழ் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

இந்த விஷயம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தார்கள். அவர்கள் தற்போது அவையில் இல்லை. பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இப்போது அமைச்சர் அவர்கள் அறிக்கை அளிக்கிறுர்கள்.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம் நீங்கலாக செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவை தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாட்டு) ஆணையின் கீழ் அறிக்கையிட்ட பகுதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1973 ஆகஸ்ட் 1-ம் நாளிலிருந்து ரத்து செய்யப்பட்டுள்ளது. 25 சதவீத 'லெவி' தாற்காலிகமாக

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 ஆகஸ்ட் 4

நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் காவிரியின் வடக்குப் புறத்திலுள்ள வட்டங்களான முசிரி, லால்குடி, உடையார்பாளையம், பெரம்பலூர், குளத்தூர் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இதேபோன்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தின் எஞ்சிய பகுதி, தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டத்தின் சில பகுதிகள், நீலகிரி மாவட்டம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள் ஆகியவை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டிருந்தது தொடர்ந்து செயலில் இருக்கும். ஆனால் கன்னியாகுமரி மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் அறிக்கையிடப்பட்ட பகுதி ஆகியவை நீங்கலாக மேற்கூறிய எல்லாப் பகுதிகளிலும் 25 சதவித லெவி தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பற்றுக்குறைப் பகுதிகளுக்கு இங்குள்ள அரிசியைத் தேவையான அளவுக்கு அனுப்பவும், விலை ஏறுமுகமாகப் போவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரசு நெல் கொள் முதல் விலைகளில் 'லெவி' நெல் கொடுப்பதால் ஏற்படும் விரயத்தை விற்பனை விலையை உயர்த்துவதன் மூலம் ஈடுசெய்ய வேண்டி யிருந்தது. இந்த நடவடிக்கைகளின் பலனாக விலைவாசிகள் இறங்க வேண்டும். எல்லையோரப் பகுதிகளும் அந்த எல்லையோரப் பகுதி களுக்கு அரிசி கடத்தப்படுவதற்கு ஏதுவாக அண்மையிலுள்ள பகுதிகளும் தமிழ்நாடு நெல், அரிசி (போக்குவரத்துக் கட்டுப்பாடு) ஆணையின்கீழ் அறிக்கையிடப்பட்ட பகுதியாகத் தொடர்ந்து செயலில் உள்ளது. கள்ளக் கடத்தலுக்காக அரிசி இங்கு குவிக்கப்படுவதைத் தடுப்பதும், இப்பகுதிகளில் நெல், அரிசி, அரிசி போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும். அறிக்கையிடப்படாத பகுதிகளிலிருந்து உள்ளூர்த் தேவைகளையொட்டி இப்பகுதிகளுக்கு அரிசி கொண்டு வர அனுமதி அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரமுண்டு. எல்லையோரப் பகுதிகளில் இவ்வாறு கொண்டு வரப்படும் அரிசியைத் தவிர, அரசு வசமுள்ள அரிசி இருப்புகளும் உறுதுணையாக அமைகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆகஸ்ட் இறுதியிலும் பிற்பகுதிகளில் செப்டம்பரிலும் அறுவடை

தொடங்கும்வரை போதுமான அரிசி கிடைப்பதற்கும் விலை அதிக அளவு ஏறுமல் இருப்பதற்கும் இந்த நடவடிக்கைகள் உறுதுணையாக அமையுமென நம்பப்படுகிறது. இதுகுறித்த அறிவிப்புகள் 1—8—1973 அன்று வெளியிடப்பட்டுள்ளன.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) அலுவல் ஆய்வுக் குழு கூடுவது பற்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கூட வேண்டிய அலுவல் ஆய்வுக் குழு திங்கட்கிழமை அன்று கேள்வி நேரத்திற்குப் பின் கூடும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் பேரவை 6—8—1973 திங்கட்கிழமை அன்று காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

(9) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

89. Notification issued with G.O. Ms. No. 666, Rural Development and Local Administration, dated the 3rd April 1973, in regard to certain amendments to the Tamil Nadu Municipal Services Pension Rules, 1970. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

9. Notification issued with G.O. Ms. No. 1389, Revenue, dated the 24th March 1973 in regard to an amendment to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [Laid on the Table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).]